அனுப்புநர்

பெறுநர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
முதலமைச்சர்(தனிப்பிரிவு),
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

மதிப்புமிகு ஐயா,

பொருள்: தேர்தல் வாக்குறுதி - புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யக் கோருதல்

****

2016-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திமுக-வின் தேர்தல் அறிக்கையில் பக்கம்.89-இல் ஆசிரியர் மற்றும் அரசு அலுவலர் நலன் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண்.317-இல் புதிய ஓய்வூதியத்திட்டத்தில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி, இந்த திட்டத்திற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து அரசு அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இந்தியாவில் மேற்கு வங்காளம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் புதிய ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, தமிழகத்திலும் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து விட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

2019-ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் திமுக தேர்தல் அறிக்கையில் பக்கம்-23-இல் அரசு ஊழியர்கள் ஓய்வூதியம் என்ற தலைப்பில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வரவும், ஓய்வூதிய நிதி மற்றும் வருங்கால வைப்பு நிதிகளை பங்குச் சந்தையிலும் தனியார் நிதி நிறுவனங்களிலும் முதலீடு செய்யக் கூடாது எனவும் திமுக பரிந்துரை செய்யும் என்ற வாக்குறுதியை வழங்கியது.

2021-இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திமுக தேர்தல் அறிக்கையில் பக்கம்-84-இல் 309-வது வாக்குறுதியாக “புதிய ஓய்வூதியத் திட்டம் கைவிடப்பட்டு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்” என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்வதன் வாயிலாக தமிழக அரசிற்கு உடனடியாக ரூ.26,000 கோடி உபரி நிதியாகக் கிடைப்பதுடன் மாதந்தோறும் அரசு ஊழியர்களுக்குச் செலுத்தும் பங்களிப்புத் தொகை மற்றும் அதற்கான வட்டி மூலம் ஏற்படும் நிதிச்சுமை முற்றாகத் தவிர்க்கப்படும். பங்களிப்பு ஓய்வூதியச் சட்டத்தின்படி மாநில அரசுகள் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணைய (PFRDA)-த்துடன் எந்த ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் தமிழக அரசு இன்று வரை கையெழுத்திடவில்லை. எனவே, தமிழக அரசு புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய சட்ட ரீதியாக தடைகள் ஏதுமில்லை.

எனவே, தமிழக அரசிற்கும், அரசுஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எவ்விதத்திலும் பயன் தராத இந்த புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து மகத்தான சாதனை படைத்த முதல்வராக திகழ புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்யும் அரசாணையை வெளியிடுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கனிவுடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன்

நாள்: தங்கள் உண்மையுள்ள

இடம்: